# உளமும் வளமும்

## (குவைத்துச் செலவு)



முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

முனைவர் பி. தமிழகன்

# உளமும் வளமும்

(குவைத்துச் செலவு)

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

முனைவர் **பி. தமிழகன்**

**திருவள்ளுவர் நிலையம்**

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | **உளமும் வளமும்** |
| ஆசிரியர் | இரா. இளங்குமரன் |
| மொழி | தமிழ் |
| பொருள் | சுற்றுலா |
| முதற் பதிப்பு | சூன் 2018 |
| பக்கம் | iv+20 = 24 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 16 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | 1/8 |
| படிகள் | 500 |
| விலை | உருபா. 15/- |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு, திருநகர், மதுரை. |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- நூலாசிரியர்
  9442760616
- 2, பிச்சையம்மாள் நகர்,
  காசாமலை, திருச்சி - 23.
  9940704702


❖❖❖

# உளமும் வளமும்

### செந்தமிழ்ச் சொற் பொருட் களஞ்சியம் வெளியீடு

### குவைத்து நாடு.

**களஞ்சியம் பதிப்பாளர்** திரு.கோ. **இளவழகனாரும்**

களஞ்சியப் **பதிப்பாசிரியர்** திரு. **பி. தமிழகனாரும்**

களஞ்சியப் **படைப்பாளன்** என்னும் நிலையில் யானும் ஆகிய மூவரும் குவைத்து நாட்டுப் **பொங்கு தமிழ் மன்றத்**தாரால் அழைக்கப்பட்டுச் சென்ற செலவும் நிகழ்ந்த நிகழ்வும். கண்ட காட்சியும் நாட்டு நிலையும் பற்றிய குறுஞ்சுவடி இஃதாம்.

களஞ்சிய அறிமுக விழாவில் மேடைக்கு வந்து இளைஞர் இருவர் குவைத்துப் பணத்தாள் வழங்கினர். நூல் வெளியீட்டுக்கு என்று அவர்கள் கூறியதால் ஏற்றேன். ஏனெனில் எங்களுக்குப் போக்கு வரவு, தங்கல், உணவு என எச் செலவும் இல்லையே!

அந்த ஆர்வமிக்க இளைஞர்கள் ஊரும் பேரும் சொல்லாமல் வழங்கிய வள்ளல் நள்ளி போன்றவராய் அகன்று விட அவர்கள் பெயர்களைத் தமிழ் நாடன் அவர்கள் வழி கேட்டு அறிந்தேன். அவர்கள் பெயர்கள்:

திருநிறை. **இலாவண்யா மணிகண்டன்**

திருநிறை. **திரு. சக்திவேல்**

-இவ் வெளியீட்டுப் பயன் அவர்கள் கொடை வளத்தால் அமைந்ததேயாம். இதனை வழக்கம் போல் அச்சீட்டுப் பொறுப்பு ஏற்பவர் திரு.**பி. தமிழகனார்.** அச்சீட்டாளர் **திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தார்.**

இவர்கள் அனைவருக்கும் நிறை நெஞ்ச நன்றி.


**வாழிய நலனே! வாழிய நிலனே!**

இன்ப அன்புடன்

**இரா. இளங்குமரன்**

15.05.2018.

**உளமும் வளமும் :** உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.



குவைத்தில் தமிழ்நாடு பொறியாளர் குழுமம் நிகழ்த்திய கோடை விழா.



குவைத்தில் தமிழ்நாடு பொறியாளர் குழுமம் நிகழ்த்திய கோடை விழாவில் மூவருக்கும் வரவேற்பு.

# உளமும் வளமும்

உள்நாட்டுச் சுற்றையும் குறைக்க வேண்டிய அகவை ; ஆனால் ஒன்றிப் போயவர்கள், ஒன்றிய நிகழ்ச்சி, தமிழ்த் தொண்டு என்பவை ‘இங்கே வா’ என அழைத்ததால் முடிந்த வரை ஏற்றுக் கொள்ள நேர்கின்றது.

மலையகம் **மாரியப்பர் வெற்றியம்மை** எம் மூத்த மகனாரோடு அவண் வந்து தாய்லாந்து கம்போடியாவும் சேரக் கண்டு வருதல் வேண்டும். தாம் ஏற்பாடு செய்வதாகச் சில ஆண்டுகளின் முன்னே நேரில் அழைத்தும் செல்வதற்காம் சூழ்நிலையில்லாமையால் இது வரை சென்றிலேம்.

செம்மொழிக்காகச் செய்யப்பட்ட **செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம்** முடிக்கப்பட்டும்- பத்தாண்டுகளின் மேலாகியும் தமிழார்வலர் கருவிப் பொருளாக மேற்பயன் பொருளாக-ஆகாத நிலையில் **செம்மொழிச் செம்மல் திருத்தகு அ.இராமசாமி ஐயா** அவர்கள் தக்கார் வெளியிடுவதாக இருந்தால் வெளியிடலாம் என்று நின்ற சொல்லும் நீடிய நன்மொழியுமாக நேர்ந்த நிலையில், **கருவி நூல் வெளியிடுதலே என் பிறவிப் பேறு எனக் கொண்ட தமிழ் போராளி திரு. கோ. இளவழகனார் நம் தமிழ்மண் பதிப்பகம்** வெளியிடும் என்றார்.

வெள்ளச் சேத இழப்பும் பெருமளவு தொடர்ந்த பொருட் சிக்கலும் உடைய அவர் பல இலக்கம் செலவிட வேண்டும். பத்துத் தொகுதிகளையும் வெளியிட ஏற்றமை –அவர் துணிபு விளக்கம்!

அச்சிட்டால் செப்பமான கருவி நூல் எழுதுவதன் பயன் அதன் ஒப்ப உழைப்புடன் மெய்ப்புப் பார்த்தல் வேண்டுமே; என் எழுத்துப்பணிக்குத் தடையாகுமே என எனக்கு அழுத்தம் வாராமல் என் நூல்கள் அனைத்தின் அச்சீட்டுப் பொறுப்பும் பெருந்தகையோடு ஏற்றுக் கொண்டு செய்து வரும் முனைவர் **பி. தமிழகனார்** தம் தலைக்கடனாக ஏற்றுக் கொண்டு மும்முறை மெய்ப்புப் பார்த்துச் செம்முறையில் அச்சீடும் நிறைகின்ற நிலையில், குவைத்து நாட்டுப் பொங்கு தமிழ் மன்றத்தில் இருந்து, ஒரு பூரிப்பான குரல் “களஞ்சிய முதற்பகுதிச் செலவை முழுதுற நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

என்று எழுந்தது ; அடுத்தே இரண்டாம் தொகுதியும் ஏற்போம்." என்றாயதுடன் குவைத்தில் மன்றச் சார்பில் **வெளியீடும் நிகழ்த்துவோம்.** அப் பொறுப்பை யாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்று வான்மழைச் சுரப்பாக வாய்த்தது.

அதனால் 10.05.2018 இல் சென்னையில் இருந்து வானூர்தி வழியே சென்று 13.05.2018 மாலையில் மீளும் முறையில் எல்லா ஏற்பாடும் இளவழகனார் வழியாகச் செய்தமையால் களஞ்சிய அச்சீட்டில் முழுதுறப் பங்கு கொண்ட இளவழகர், தமிழகர், யான் மூவரும் ஒருவராம் நிலையில் சென்றோம்.

**வரவேற்பும் தங்குதலும் :**

வானூர்தி நிலையத்திலே பொங்கு தமிழ் மன்றத்தார், பூங்கொத்து வழங்கி வரவேற்றனர். அவரவர்க்கு ஒன்றோ இரண்டோ வண்டி இருந்தாக வேண்டிய நாட்டில் பலர் பல வண்டிகளில் வருதல் இயல்பே. வரவேற்ற பெருமக்களிடம் நாகர் கோயில் கேசவ பரமேசுவர குமரர் முன்னிலையாக, "உங்கள் புன்முறுவலே போதுமானதாகப் பூங்கொத்துத் தந்தீர்கள்!

மாந்தர் முகம் தாமரை: கண் குவளை: மூக்கு எள் மலர் ; காது வள்ளை: இதழ் முருக்கிதழ்! பல் முல்லை: கை ஐவிரலிப் பூவாம் காந்தள் : அவனும் பூ: அவளும் பூ : அவன் அரும்புகிறான். அவள் பூப் படைகிறாள் : அவர்கள் மணம் கொண்டு மக்களைப் பெற்று வழி வழி சிறக்கச் செய்கின்றனர்: உங்கள் வரவேற்புக்கு நன்றி!" என்று **வானூர்தி நிலையத்தின் உள்ளேயே நுழைவாயில் பகுதியில்** வரவேற்ற இடமே பூங்கொத்து விற்பனை நிலையமாக இருக்க அங்கேயே ஒளிப்படம் எடுத்துக் கொண்டு அவர்கள் திட்டமிட்ட வண்டியில் ஏறி, கொண்டு சென்ற பொருள்களை ஏற்றி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்தியப் பெரும் புகழ் வயிரப் பெயராம் **கோகினூர்** விடுதியில் வேண்டிய ஏந்துகளுடன் தங்கச் செய்தனர்.

நமக்குள்ள பொழுதில் 2.30 மணிப் பொழுது குவைத்து நாட்டில் பிந்தும். அந்நிலையில் விடுதி செல்ல, நீராட, காலை உணவு கொள்ள சற்றே ஓய்ந்திருந்து,

பொங்கு தமிழ்மன்றம், **பொறியாளர் குழுமம்** நிகழ்த்தும் **கலைவிழாவொடு நூல் வெளியீட்டு விழாவும்** இணைய எழிலார்த்த விழாவாக நிகழ்ந்தது.

பொங்கு தமிழ்மன்றம் எடுத்த பூரிப்பான விழாவாகக் குழந்தையர், தாயர், மகளிர், ஆடவர், மன்றத்தர் என அரங்கம் நிரம்பி வழிய ஆயிரக் கணக்கில் இடமறக் கூடியிருந்தனர்.

**வழிநிலை மாட்சியும் கலைவிழா மாட்சியும்:**

வானூர்தி நிலையத்தில் இருந்து விடுதிக்கு வருவதற்கு ஒரு மணிப் பொழுதுச் செலவு. அச்செலவில் குவைத்தின் ஒருமையும் பெருமையும் கைகோத்துக் கூத்தாடுதல் விளங்கியது! கூரை, ஓடு, தகர வீடு என ஒன்று தானும் இல்லை! தனிவீடாயினும் அடுக்கு மாடி எனினும் ஏறத்தாழப் பழுப்பு நிற வண்ண மாளிகைகள். திட்ட மிட்ட அமைப்பு-சாலையின் நேர்த்தி **சாலை என்றால் அதுதான் சாலை.** சுங்கச் சாவடி, சீட்டு- கட்டணம் நாங்கள் எங்கும் காணாமை- இப்படி ஒரு நாடா ? என எண்ணினால், பொங்கு தமிழ் மன்றத்தார் **சீருடையில் அனைவரும் விளங்கினர்!** உள்ளக **ஒன்றுதலை, அகம் காட்டும் பளிங்கு முகம் தானே!** அங்கே **முகமும் காட்டியது; முறுவலும் காட்டியது; தொண்டும் காட்டியது. அவைபோலவே உடையும் காட்டியது; நடையும் காட்டியது.** எப்படி? மன்றத்தார் மேடையின் பக்கம் அமைந்து நின்றனரே அல்லாமல் அமர்ந்தார் அல்லர்! "யான் கண்டனையர் என் இளையரும்" என்பது போல் பொங்கு தமிழ் அன்னை பூரிக்க அமைந்த காணரிய காட்சி ! அவர்களுள் எவரும் எத்தொண்டும் செய்தனர்: மேடையில் நின்று பணிசெய்தவரை அன்றி அமர்ந்தார் எவரும் இல்லை! தலைவர், செயலர் - ஆம் அவர்களும் தாம்! விழாவில் தொண்டர்களே!

மூன்று வயதுக் குழந்தை முதல் பத்து அல்லது பன்னிரண்டு வயதுடைய பெண் குழந்தைகளே பங்கு கொண்டனர்.

**சிவதாண்டவம்** அறுவர் குழந்தைகள்! உள்ளதில் சிறிய குழந்தை சிவன்! அது ஆடிய ஆட்டம், தூக்கிய திருவடி (ஊர்த்துவ) ஆட்டம் எல்லார் உள்ளங்களையும் கொள்ளை கொண்டது! மற்றவர்களும் சளைத்தவர்கள் இல்லை!

**மேலே** ஒப்பனையும் - பிறை சூடலும் முத்தலை வேலும் (திரிசூலமும்) கொண்டு ஆடினால் **கீழே** அந்த ஒப்பனையோ முத்தலை வேலோ இல்லாமல் அவர்களிலும் சின்னஞ்சிறு குழந்தைகள்ஆடிய ஆட்டம் **எங்களையும் பாருங்கள்** எனத் தூண்டியது ! **கங்கைக் கரையில்** செங்குட்டுவன் முன்னர்க் **கூத்தச் சாக்கையன்** ஆடிய ஆட்டமும், அமராவதி புதூர் அன்னை சாரதையார் கல்லூரி ஆண்டு விழாவில் கண்ட **சிவதாண்டவமும்** என்னுள் ஒன்றிய காட்சிகளாக ஒன்றின!

ஆடல் மாறி, ஆடல் வருமுன் இடையே பாடல், காட்சிப் படம் எனத் தொடர இடைவெளி நூல் வெளியீடு என நிகழ்வு அமைத்திருந்தனர்.

**நூல் வெளியீடு :**

நூலாசிரியர், பதிப்பாளர், பதிப்பாசிரியர், என மூவர்க்கும் சிறப்புச் செய்தனர். அச்சிறப்பும் ஒப்பமைந்த உயர்வை எடுத்துக் காட்டின. ஒருவர் பொன்னாடை போர்த்த, ஒருவர் சந்தன நெடுமாலை சூட்ட, ஒருவர் பாராட்டுப் பேழை வழங்க என நிகழ்ந்தன.

சொற் பொருட் களஞ்சியத்தை யான் வெளியிட்டேன். முதல் தொகுதி இரண்டாம் தொகுதிப் பொறுப்பு ஏற்ற அவர்கள் மேலும் இருதொகுதிகள் ஏற்பதாகக் கூறினர். ஒவ்வொன்றையும் பலர் பலர் பெயர் கூற அவர்கள் மேடைக்கு வர–நூல் வழங்க– பெற்றுக் கொண்டவர் அனைவரும் வரிசையாக நூலுடன் நிற்க - ஒளிப்படம் தனித்தனியும் மொத்தமாகவும் எடுத்துக் கொண்டனர்.

இயற்கை இயங்கியல் மொழி நம் மொழி. அதன் வரி வடிவு –ஒலி வடிவு என்பனவும் பொருள் அமைவும் இயற்கை இயங்கியல் வழிப்பட்டதே.

குழந்தை, தான் கேட்ட ஒலியை மீளச் சொல்லும். "கா கா" என்றால் அதுவும் கா கா, காக்கா என்கிறது.பின்னே மக்களால் காகம் ஆகின்றது. காகளம் முதலாக விரிகிறது.

**கொக்–கொக்** என்பதைக் கேட்கின்றது. கொக் கொக் என்று சொல்லக் கொக்கு வந்துவிட்டது. கொக்கி, கொக்கறை, கொக்குறை, கோக்காலி, கொக்கிப்புழு என விரிகின்றது.

காதருகே வந்து ஒரு சிறு பறவை ஒலிக்கிறது. 'ஈ' யென! அதன் பெயர் ஈ ஆகிறது.

குர் குர் –குர்க்கு– குரக்கு– குரங்கு ஆகி விரிகின்றது.

கீர் கீர் கீரியாகின்றது!

நீங்களே **தமிழ் தமிழ்** என்று தொடர்ந்து சில முறை சொல்லுங்கள். **அமிழ்து அமிழ்து** என்றாகும்.

தமிழ் வேறு இல்லை!அமிழ்து வேறு இல்லை! அம்மம் உண்ட குழந்தையே அம்மாவையும் அமிழ்த்தையும் தந்தது என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும்– **குழந்தை நிலையில் இருந்த மாந்தன் குழந்தை போல் ஒலியைக் கேட்டுச் சொல்லிச் சொல்லி, சொல்லாய், பொருளாய், வந்தது நம்மொழி.**

**இயற்கை வடிவம் வட்டம்.** கதிர், மதி, கடலலை – சூறைக் காற்று என்பன வெல்லாம் வட்டம். 'அ' முதல் ஆய்தம் வரை அனைத்தும் வட்ட அமைப்பு உயிர் எழுத்துக்களே !

உயிரின் அடையாளம்! இயக்க அடையாளம்– வட்டம் . ஆதலால் **வட்டெழுத்து – கண்ணெழுத்து – கோலெழுத்து – ஓவிய எழுத்து** எனப் பண்டே எழுத்துக்குப் பெயரிட்டனர்.

அவற்றையெல்லாம் அறிந்து கொள்ள இச் சொற்பொருள் களஞ்சியம் மிகப் பயன்படும்.

**இதில் வேற்றுச் சொல் ஒன்றும் இல்லை.**

**அவ்வாறே வேற்று எழுத்து எதுவும் இல்லை.**

இவ்வரிய தொகுதிகளை அருமையாகப் பல்வேறு இடையூறுகளுக்கு இடையே பதிப்பித்த பெருந்தகை **கோ. இளவழகனார்** இங்குள்ளார். இதன் பதிப்பாசிரியராக விளங்கும் **பி. தமிழகனார்** இங்குள்ளார். பொங்கு தமிழ் மன்ற அழைப்பால் எய்தினோம்.

யான் தமிழ் நாட்டில் பிறந்தவன் – தமிழ் நாட்டில் வளர்ந்தவன். தமிழ் நாட்டில் வாழ்பவன். இப்பொழுது தமிழ் நாட்டிலேயே இருப்பதாக உணர்கிறேன். ஏனெனில் **தமிழ் நாடி என்னை – எங்களை – அழைத்தீர்கள்! தமிழ் நாடி அழைப்பார் எங்கிருந்தாலும் அது தமிழ் நாடே!**

என் தாய் வாயும்– என்முன்னே அமர்ந்திருக்கும் அம்மையார் தாய் வாயும் வெவ்வேறே. இங்குள்ள ஒவ்வொருவர் தாய்மார்களின் வாய்களும் வெவ்வேறே! ஆனால் அவர்கள் வாயில் இருந்து வந்த மொழி ஒன்றே! அது **நம் தாய்மொழியாம் தமிழ் மொழி !** அதனை வளர்க்க – காக்க – உயர்த்த இக்களஞ்சியம் பயனாம் என்று சொல்லி அனைவரையும் வணங்கி, 'வாழிய நலனே வாழிய நிலனே' என நிறைவு செய்கிறேன். என்று என் வெளியீட்டுரையை நிறைவித்தேன்.

அடுத்து தமிழகனார் அவர்கள் திரு.கா.சக்கரவர்த்தி என்பார் எழுதிய **சொல்லத் தேவையில்லாத உண்மைகள்** என்னும் நூலை வெளியிட்டு அந்நூல் பற்றிய தம் கருத்துகள் சிலவற்றைக் கூறி "எளிய இனிய சுவையான நூலை அனைவரும் பெற்று நலமுறுக" என்று உரைத்தார். அந்நூலாசிரியர் ஏற்புரை வழங்கினார்.பொழுது கருதி அடுத்தே நண்பகல் உணவு வேளை

ஆதலால், அதற்கு ஏந்தாகவும் பின்னும் கூட்டம் இருப்பதால் பேசுவதாகவும் **இளவழகனார்** கூறினார்.

அனைவரும் வரிசையில் நின்று **எடுத்தூண்** கொண்டு உண்டனர். எனக்கு யான் இருக்குமிடத்தில் உணவு வந்தது. உண்ட பின் தங்கல் விடுதிக்குச் சென்றோம்.ஓய்வு கொண்டு மாலை 6 மணியளவில் நிகழ இருக்கும் கூட்டத்துக்கு அழைத்துக் கொள்வதாகக் கூறினார். அவ்வாறே விடுதி சென்றோம். கலை நிகழ்ச்சி – நாடகம் – உரையாடல் எனத் தொடர்வதாக நிகழ்ச்சி நிரல் காட்டியது.

**தொண்டருக்குத் தொண்டர்**

இவ்விடத்தில் ஒன்றைக் சொல்லியாக வேண்டும். அது **கோ. இளவழகனார்** பற்றியது. புறப்படுதல் தொடங்கி நிறைவுறல் வரை முழுதுறு தொண்டராக இருந்தவர் அவர். வானூர்தி நிலைய நுழைவாயிலுக்குத் தள்ளு வண்டி எடுக்க ஓடுபவர் அவர். பொருள்களைத் தமிழகனாரும் உடனிருந்து ஏற்றினாலும் வண்டி தள்ளுபவர் அவர். பொருள் எடை போடல், சீட்டுத் தணிக்கை ஆகியவற்றுக்கும் ஓடி ஓடி உசாவி முன்னே செல்பவர் அவர். யானோ முதியன் ; தமிழகனாரோ புதியர்! எனக்கு அரிது பெறு துணையாக இருப்பார்! ஒரு வேளை என் பை தமிழகனார் தோளில் இருக்கும் ; ஒரு வேளை இளவழகனார் தோளில் இருக்கும் ; சில வேளையில் மூவர் பைகளையும் ஒருங்கே ஒவ்வொருவரும் தூக்க நேரிடும்! வழி கேட்டலும் வழி காட்டலும் எங்களைக் கடவுச் சீட்டு அடையாள அட்டை -நுழைவுச் சீட்டு என்பனவற்றை வைத்துள்ளோமா என்று கண்காணித்துக் கொள்வதும் இளவழகனாரே மேற்கொண்டார். தங்கல் மனையில் சிறு சிறு பால் புட்டி, இனிப்புப் புட்டி, குளம்பித் தூள் உறை, தனி தனிப் பைகளில் மூன்று நாள்களுக்கும் பயன்படுத்தினாலும் மேலும் எஞ்சும் அளவும் இருந்த பொருள்களில் **வேளைக்கு வேளை கேட்டுக் கேட்டு வெந்நீரோ, குளம்பியோ, போட்டுக் கொண்டு வந்து எங்களுக்குத் தருபவர் அவர்; குடித்த குவளையையும் என்னைக் கொண்டு செல்ல விடாமல் தாமே கொண்டு போகின்றவரும் அவர்.**

போட்டுத் தடவும் எந்த மருந்துக்கும் போகாத **மூட்டு வலி,** இருபதடி, முப்பதடி தொலைவுக்குக் கேட்கும் **இருமல் ஒலி,** மேலும் உடலில் அமைந்த தொல்லை!**அனைத்தும் தாங்கியவராய்ச் செய்து தொண்டருக்குத் தொண்டராய் விளங்கிய அவர் அருமை உருகச் செய்வதாம்.**

அவர் செய்த தொண்டு இரண்டு நிகழ்வுகளை நினைவூட்டப் பளிச்சிடுகிறது. வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பின் அழைப்பை ஏற்று யான் அமெரிக்கா செல்லும் போது திரைப்படக் கலைஞர்- ஓவியம் வல்லார்- இலக்கியத் தேர்ச்சியர் **சிவகுமார்** அவர்கள், தம் மாமனார், மகனார், தம் மாமியார், துணைவியார் ஆகிய ஐவரும் ஒன்றாக வானூர்தி நிலையம் அதே விழாவுக்காக வந்தனர்.

**சிவகுமார்** அவர்கள் தம் மாமனார் தோள் மேல் கை போட்டுக் கொண்டு உரையாடியதும், அம்மையார் அவர்கள் முதல் அனைவரும் தள்ளுவண்டி தள்ளுதலும் என் பைகள் இரண்டையும் அவர்களே தள்ளியும் எடைபோட்டும் நியூயார்க்கில் இறங்கி, நியூ செர்சிக்கு வானூர்தி மாறும் போது அதற்குரிய கடவுச்சீட்டு முதலியவற்றைச் சிவகுமார் மகனார் பருத்திவீரன் புகழ் **கார்த்திக்கு** அவர்கள் ஓடி ஓடிச் செய்ததும் ஆகிய நினைவு கிளர்ந்தது. இது **ஒன்று**.

தொல்காப்பியம், அப்பாத்துரையம் ஆகியவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பு ஏற்றுத் தமிழ்மண் பதிப்பகத்திற்கு வந்திருந்த இனிய பேர்த்தியார் **கல்பனா சேக்கிழார்** தம் வண்டியிலேயே சென்னையில் இருந்து மதுரைக்குக் கொண்டு போய் விடுவதாகக் கூறியிருக்கும் நிலையில், நெய்வேலிக்கு யான் செல்ல நேர்ந்த மாற்றத்தில் என்னைச் சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்று, சில நாட்கள் தங்கியிருந்து, என் எண்ணம் பிச்சாவரம் சதுப்பு நிலக்காடு காணும் வேட்கையில் இருந்தது அறிந்து, **பிச்சாவரம் அழைத்துச் சென்றும், பூம்புகார் அழைத்துச் சென்றும்,** தஞ்சை சார் **வயலூரில்** உள்ள தம் வள மனைக்கு அழைத்துச் சென்றும், நெய்வேலி நிகழ்வுக்கு ஏந்தான வகையில் **பேரா. மரு. சேக்கிழார் ஓடி ஓடிச் செய்த தொண்டு மற்றொன்று.** சேக்கிழாரோ அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவத் துறைப் பேராசிரியர். அவர்க்கு எப்படி இந்தத் தொண்டு குடி புகுந்தது? யான் பெற்ற பேறு என அமைதல் சாலும் ! இத்தகையவற்றை எழுதின் தனிப்பெரு நூலாம்!

**களஞ்சிய அறிமுகம் :**

மாலை 6 மணிக்குத் தனி அரங்கம். பெரிதும் பொறிஞர், திருக்குறள் ஆர்வலர், மன்ற உறுப்பினர் கூட்டம். முன்னின்று ஏற்பாடு செய்தவர் தனிப்பெரும் ஆர்வலர் – அன்பர்- நல்ல குடிமையர்- **தமிழ் நாடன்** அவர்கள். இளவழகரையும் என்னையும் முன்னரே அறிந்த **பழங்கேண்மையர்.**

பொங்கு தமிழ் மன்றப் பொறுப்பில் யாங்கள் சென்றாலும் **தம் கடப்பாடாகக் கொண்டு சிறப்ப ஏற்பாடு செய்தவர்.** கூட்டம் தொடங்கியது. தமிழ் வாழ்த்து வரவேற்பு இரண்டும் இளஞ்செல்வியர்களே!

செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சிய அறிமுக விழா. முன்னர்ப் பொது விழாவில் செய்யப்பட்ட சிறப்புகள் அனைத்தும் எங்கள் மூவர்க்கும் மீளவும் செய்யப்பட்டன!

அன்பர்கள் அறிமுக உரை- வாழ்த்துரை என நிகழ்ந்து படைப்பாளன் என்னும் நிலையில் என் பொழிவு தொடங்கியது.

"பெருமக்களே மேடையில் நாங்கள் மூவரும் **நரைத் தலையர்;** எங்கள் முன்னே இருக்கும் உங்கள் தலைகளோ கன்னங்கறேல் என்று விளங்கித் தோன்றுகின்றன. முதியர் தக்க வழி காட்ட வேண்டும். இளையரும் வாலியரும் அவ்வழியை ஆய்ந்து பற்ற வேண்டும் என்னும் முந்தையர் முறைமை பேணும் சான்றாம் இது!

கூட்டம் தொடங்கும் போது சுவரில் மாட்டப் பட்டியிருக்கும் **இக் கடிகையாரம் 6.30.** என் கடிகையாரம் தமிழ்நாட்டு நேரம் காட்டுவது 9-00 மணி! **2.30 மணி *இடைவெளி ஏன்?***

காலமும் இடமும் முதற்பொருள் என்றார் தொல்காப்பியர். அவர் கண்டது தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. எளிமையாக உங்களுக்கு நான் சொல்கிறேன்.

என் **முன்னர்** நீங்கள் இருக்கிறீர்கள்; எனக்கு முன்னர் எம் தந்தையர் இருந்தார். இந்த, முன், முன்பு, முன்னர், முன்னை என்பன **இடமும் காலமும் காட்ட வில்லையா? முன்னிடம் முற்காலம் என்பவை தாமே!** என் பின்னர் சுவர் இருக்கிறது. என் பின்னர் என் மக்கள் உள்ளனர். பின், பின்பு, பின்னர், பின்னை என்பன இடமும் காலமும் காட்டவில்லையா? **பின்னிடம் பிற்காலம் என்பவை தாமே.**

ஞான்று, ஆண்டு, யாண்டு, என்னும் சொற்கள் இடமும் காலமும் குறிப்பவை அல்லவா!

இடமும் காலமும் ஒன்றை ஒன்று தீர்மானிக்கின்றன என்னும் ஐன்சுத்தீனார் கொள்கை அறிவியல் நுண்மாண் நுழைபுலக் கொள்கையாயது! தொல்காப்பியர் முதற் பொருள் கொள்கையோ **ஏட்டளவில் நின்று விட்டது! நாட்டளவு தானும் அறியச் செய்யவில்லை!**

**வங்கத்துச் சரத் சந்திரர்** செடி கொடிகளுக்கு உயிருண்டு என்று கண்ட கொள்கை அவர்க்கு உலகப் புகழ் தந்தது.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே" என்றும்,

"புல்லும் மரனும் ஓரறி வுயிரே" என்றும்

சொல்லப்பட்ட தொல்காப்பியம் **இலக்கண அளவில்** நின்று விட்டது. நம்மை-நம் பழமையை -நம் முந்தையர் அறிவுக் குவையை அறியச் செய்யாமல் **புதை பொருள்** ஒன்று எவர் கண்ணிலும் தட்டுப் படாமல் ஆவது போல் ஆகி விட்டது!

**உளமும் வளமும் சிறந்த நீங்கள் இக்களஞ்சியத்தால் அப்பொருள்களை ஓரிடத்தே அகர முறையில் அறியக் கூடும்! வாய்ப்பும் வழங்கும் !**

உங்கள் வீடு கட்ட நினைக்கும் போது புத்தகத்துக்கென ஓர் அறை வேண்டா, ஒரு நிலைப் பேழையாவது வைக்க எண்ணம் வருவதுண்டதா?

மிதியடிக்கு ஓரிடம்! பூச்செடிக்கு ஓர் தொட்டி! படர் கொடிக்குப் பந்தல்! பொருள்கள் வைக்க அறை! சுவர்ப் பேழை , சமையல் அறை, கழிப்பறை, படுக்கை அறை, விருந்துண்ணும் பகுதி என்று வரைபடம் தீட்டும் போது நூலகம் வைக்க எண்ணம் எழுவதுண்டா? **கடந்த காலம் போனாலும் இப்போதாவது எண்ணம் எழ வேண்டாமா?** நம் இளவழகனார் **ஒரு பல்கலைக் கழகமோ, அரசோ செய்ய வேண்டிய செயலைத் தம் தலைமேல் அள்ளிப்போட்டுக் கொண்டு செயல்படுகிறார். நூற்கொடைக்கு மேற்கொடை இல்லை என உழைக்கிறார். அவ்வாறு செய்பவர் வாய்ப்பது அரிது.** அதற்குத் துணை வாய்ப்பது போல் **குவைத்துக்கு அழைத்து வெளியீட்டுப் பொறுப்பும் ஏற்றுள்ளீர்கள்.** உங்கள் செயலைப் பாராட்டுவதுடன் அரிய நூல்களைத் தேடித் தேடி வைப்பாக்குங்கள் உங்கள் பெயரர்கள், எங்கள் தாத்தா படித்த நூல்- வாங்கித் தொகுத்த நூல் என்னும் பெருமையை எய்துங்கள்!

ஆங்கிலத்தில் செய்தித்தாளை **நியூசு** என்பர். (News) அதன் விளக்கம் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்பதை அறிவீர்கள். யான் நூலின் சிறப்பைக் கூறுகிறேன்.

நூல்: பாறைக் கல்லைப் பாளம் பாளமாகப் பெயர்த் தெடுக்க நூலடிப்பர்; கோணல் மரத்தை நேராக்க நூலடிப்பர்; சுவர் வைக்கவும் சுவர் எழுப்பவும்

நூலைப் பயன்படுத்துவர் ; நீர் வாட்டம் பார்க்க நூலடித்துத் தள மமைப்பர். நூல் **செம்மை, நேர்மை, ஒழுங்குறுத்தல், சீர் செய்தல்** வகையால் உதவுகின்றது. நூலகம் வைப்பாரும் அவ்வாறே நலம் கொள்ள வாய்ப்பதால் சுவடித் தொகுப்பு -நூல் தொகுப்பு எனச் செய்கிறோம்.நூலகம் என்றோ சுவடிச் சாலை என்றோ பெயர் சூட்டுகின்றோம்!

யான் காண்பது, **நூலகம்** என்பது குழந்தைகளுக்குப் 'பாலக'மாகும். அறிவு நலம் பெற **காலகம்** ஆகும். கால் என்பது காற்று. காற்று வரும் வழி பலகணி என்பது காலகம் ஆகும். அமைந்து கற்க விரும்பும் முதியர்க்கு **'மேலகம்'** (வீட்டுலகம், இன்பவுலகம்) ஆகும். அதனை அகர முதலி, களஞ்சியம், துறை நூல், கலை நூல், இலக்கியம், இலக்கணம், கதை, பாடல் எனப் பகுத்து வைத்துப் பயன் கொள்ளுங்கள். அதற்கு இளவழகர் வெளியீடு இவ்வனைத்தும் கொண்டே நூலகம் வைக்கத் தக்க அளவு தொகுதி தொகுதியாக வெளியிட்டுள்ளார்! பயன் கொள்க என்று அமையுமுன் ஒன்றைச் சொல்லியாக வேண்டும் என நினைக்கிறேன்.

பொங்கு தமிழ் மன்ற முகப்பில்,

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு"** என்று இருந்தது. பாவேந்தரின் இம்முழக்கத்தை அடுத்து வரும் முழக்கம் போற்றப்படாமல் பண்டு முதல் இன்று வரை கெட்டுக் கொண்டே வந்தும் தெளிவு பிறக்காமலே இழிநிலைக்கு ஆட்பட்டுக் கொண்டே உள்ளோம்! அத் தொடர்!

**"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே"** என்பது, நாம் **ஒன்று பட்டால் வென்று விட்டோம்** என்பது பொருள்.

அதற்கு வழியென்ன எனின் வள்ளுவர் வழிகாட்டுகிறார் :

**"ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்"** என்பது!

மாந்தர் எவரும் குறையுடையவரே, குறையை எண்ணாமல் அவரிடம் உள்ள நிறையை - நம்மோடு ஒத்ததை எண்ணி உறவாகுங்கள்!

அவ்வுறவு மேலும் மேலும் ஒத்ததாக்கி விரிவுறும்! அதனைப் **பொங்குத் தமிழ் மன்றம் முன்னெடுத்துச் செய்யுமாக** என வேண்டி வணங்கி அமைகின்றேன்" என்றேன்.

அடுத்துத் தமிழகனார் சொற் பொருட் களஞ்சிய அமைப்பையும் அமைந்துள்ள பொருள்களை அரிய பட்டியலிட்டும் காட்டி விளக்கினார்.

இதிலுள்ள **பழமொழி, மக்கள் வழக்கு, வட்டார வழக்கு, வேர்ச் சொல் விளக்கம், ஊர்ப்பெயர், ஒரு பொருள் பன்மொழி, முறைப் பெயர், இலக்கிய வகைமை, அழகுக்குள்ள பெயர்கள்** என்று அடுக்கிக் கூறிய பட்டியல் அவையை அயர்த்தியது. நிறுத்தியும் எண்ணியும் அவர் சொல்லிய சொல் என்னையும் திகைப்புறுத்தியது என்பதை என் மனச் சான்றே அறியும். அப்பணியில் அவர் தோய்ந்த தோய்வின் வெளிப்பாடும் ஆய்ந்த ஆய்வின் திறமும் புது நூலாக்கம் - பட்டங்கள் பெற வாய்த்தபேறும் சொல்லி அமைந்தார்.

குரல் பழுதுபட்ட நிலையிலும் இளவழகன் உரை **பிழிசாறாக** விளங்கியது.

**"தொல்காப்பியம், வள்ளுவம்,** பாவாணம், **அனைத்துச் செறிவும் அறிய அவாவுவார்க்கு இத்தொகுதிகள் ஒப்பிலா வகையில் அமைந்துள்ளது. இப்படைப்பு மேலும் பெருகும். நூல் ஆர்வலர் பெருகின் எல்லையில்லா பணிகள் செய்ய மேலும் பன்மடங்கு இடமுண்டு. அத்தொண்டில் முழுதுற ஆட்படுத்திக் கொள்ளுவதே என் பிறவிப் பேறு"**! என்றமை அவையை அசைக்கவே செய்தது!

அவர் தொண்டை அவ்வளவு பேசும் தொண்டுக்கு உதவியது, அவர் ஆர்வப் பெருக்கும் தொண்டுளத்தாலுமே யாம் என்பதை விளக்கிற்று!"

**தமிழ்நாடன்** அவர்கள் திருக்குறள் வகுப்புகள் நடத்துதலில் கண்ணும் கருத்துமாக இருந்து பொங்கு தமிழ் மன்றச் சார்பில் **500 வகுப்புகள்** நடத்த ஏற்பாடு செய்துள்ளார் என்பது எத்தகைய அரிய செயல்! அதில் ஈடுபட்ட ஆசிரியர்க்குப் பாராட்டு, வகுப்புக்கு வந்தோர்க்குச் சான்றிதழ் எனத் தொடர்ந்தது. இளைய மாணவர்களா திருக்குறள் பயின்றவர்! அப்படி எண்ணிய எண்ணம் என்னைத் திகைக்க வைத்தது. 20,30,40 வயதினர் என்பதை நோக்கும் போது, இவர்கள் ஆர்வம் இவர்கள் வழிமுறைச் செல்வங்களுக்கு எடுத்துக் காட்டாகிச் சிறக்கும் என்னும் நம்பிக்கை ஏற்படுத்தியது. அடுத்து நன்றியுரை, எடுத்தூண் எனவும், கலந்துரையாடல் எனவும் 9.30வரை நீடித்து முழு நிறைவாகியது. இவ் வெளியீட்டுச் செல்லுகை தமிழன் **அயலகம் வந்தால் தான், மொழி, இனப் பற்றுமை கொள்வான்** என்பதை என்னுள் **முன்னினும் மிக உறுதிப்படுத்தியது.**

இசுலாமிய நாடுகளில் வெள்ளி விடுமுறை நாள். ஆதலால் முழுநாள் விழாவாக வெள்ளிக் கிழமை நிகழ்வுகள் முழுதுற அமைந்தன. காரி, ஞாயிறு

பணி நாள், ஆனால், விடுப்பு எடுத்துக் கொண்டு எங்களைப் பேரன்புப் பெருந்தகை தமிழ்நாடன் அவர்கள் **நாடு காண்** நல நாளாகச் செய்தார்.

**நாடு கண்ட நலப்பாடு :**

காலையில் வழக்கம் போல் குளம்பி யருந்தி நீராடி முடிக்கு முன் தமிழ் நாடன் அவர்கள் குடும்பத்துடன் காலை உணவும் வர உண்டு அமைந்தோம். கிடைக்கும் ஓய்வில் மூன்று குறுஞ் சுவடிகளின் மெய்ப்புப் பார்த்தேன். தமிழ் நாடனார் 10 மணி அளவில் மீள எய்தினார். இன்று விடுமுறை போட்டு விட்டேன். நாம் ஊரைச் சுற்றிப் பார்க்கலாம் என்றார்.

வானூர்தி நிலையத்தில் இருந்து தொடங்கும் போதே **குவைத் நகரம்** என்னும் பலகை கிளர்ந்தது. அதுவே தலைநகர் ; பெரு நகர். நாங்கள் தங்கியிருந்த இடமும் நகரொப்பதே. சிற்றூர் என்பவை ஊடு ஊடு தோன்றின. எங்கும் ஆங்கிலம், அரபியில் சாலைப் பெயர், தெருப் பெயர் விளக்கங்கள் செப்பமாய் இருந்தன. வண்டியை விட்டு இறங்காமலே பார்த்துக் கொண்டு சென்றோம். குவைத்து நகருக்கு முன்னரே கடற்காட்சி. மாலைப் பொழுதில் மக்கள் பொழுது போக்க குழந்தைகள் விளையாட அமைந்த அழகான புல்வெளி- நடைபாதை. கடலின் கரையில் பெரிய கற்பாறைகளை யானையும் பிடியும் கன்றும் படுத்தது போல் அடுக்கி வைக்கப்பட்ட பாவுகல் எட்டடி பத்தடி! கரை அகன்ற பெரிய சுவராய் நிலத்தின் மேல் இரண்டடி அளவின் உயரத்தில் அமர்ந்து கடலைக் காண வாய்ப்பு- அமைந்திருந்தன. சாலைக்கும் கடற்கரைக்கும் இடையே பசும்புல் பரப்பு- ஊடு ஊடு குறுஞ்செடிகள் வேண்டுமிடத்துக் கழிப்பறை- அகன்ற வகையில் வண்டி நிறுத்த வளாகங்கள் என அமைந்திருந்தன.

கப்பல் ஒன்று ஒருகல் தொலைவில் நின்றது. அங்கிருந்து படகில் பொருள்கள் போக்கு வரவு புரிதல்.

கடல் நீர் பளிக்கு நீர்; அலைகள் கல்லடுக்கில் மோதி மீளல் -வெண்ணுரை; அவை அமுக்கு நீரில் திரண்டு கற்றையாம். தூய நீராதலால் நுரை காட்டி உடன் உடைந்து விடுகின்றது. ஆதலால் வெண்ணுரை போர்த்து நிற்றலோ வருதலோ இல்லை.

கீழே இறங்கி கடலைத் தொட முடியாது. காலை நனைக்க முடியாது. எங்கும் மணற்பரப்பாய்க் காட்சி தந்தும் கடற்கரையில் மணற்பரப்பு இல்லை; கடற்கானலோ, குறுந்தூறுகளோ, கால்களோ, கழிமுகங்களோ இல்லை!

மீன்பிடி படகும் தோன்றவில்லை. தூண்டில் வலை காணப் பட்டில. காற்று பகல் 11 மணி வெப்புப் பொழுதிலேயே வெப்பொழிந்த தண்ணியது! பலர்

அப்பொழுதேயே வண்டியோடு வந்து நிறுத்தி உலாவுதல். பகல், மாலைப் பொழுதுகளில் உணவு சிற்றுண்டி கொண்டு வந்து விரும்பும் புல்வெளியில் அமர்ந்து உண்ணலாம். வேண்டாப் பொருள்களை அங்கங்கே போட அகன்ற கன்மாத் தொட்டிகள் உள்ளன. இருந்து விற்பார் - கூவி விற்பார்- எவரும் இல்லை.குவைத்து நகரம் நாங்கள் சென்ற இடத்தில் இருந்தே தெரிந்தது. அவ்வளவு உயரமாய் மலையன்ன அடுக்கு மாடிகள்.

பெரிய வளாகமே அன்றிக் காட்சிச் சாலையோ கலைக்கூடமோ நீந்து துறையோ இல்லை என அறிந்ததால் அவ்வளவில் மீண்டோம்.

எறும்பு, ஈ ,நண்டு, நத்தை, கொக்கு, குருவி, என எவையும் காணவில்லை. தூசி தும்பு, நீர்த்தேக்கம், வடிகால் நீர் எங்கும் காணப்படவில்லை.

தமிழ் நாடன் அவர்களால் அறிய வந்த செய்திகள் :

அந்நாட்டில் அரசர் உள்ளார். தேசிய மொழி அரபு: இணைப்பு மொழி ஆங்கிலம் ; சில பள்ளிகளில் தமிழ் விருப்பப் பாடம். கல்லூரி உண்டு. பல்கலை கழகம் இல்லை.

ஆவணப் பதிவகம், சிறைச்சாலை, படை நிலை இல்லை. காவல் துறை அலுவலகம் உண்டு. சாலையில் விளக்கு முதல் எல்லாமும் தானியங்கியே.

**குற்றம் செய்வார் -களவு புரிவார்இலர்-குற்றம் எனப் பிடிபட்டால் கடும் தண்டனை உண்டு. அதற்கே காவல் துறை.** பல்பொருள் கடை- உணவகம், மருந்துக் கடை உண்டு. திரைப்படக்காட்சி இல்லை. தொலைக்காட்சி உண்டு. தமிழ்ச் செய்தித்தாள், மாதிகை இதழ் இல்லை. அரபி இதழ் வனப்பு மிக உண்டு. பள்ளிவாசல் தவிர வேறு வழிபாட்டிடம் இல்லை. கிறித்தவர்கள் இரண்டு மூன்று வீடுகள் கூடி அங்கங்கு வீட்டுக்குள் வழிபாடு செய்வர். தமிழர் அவரவர் வீடுகளில் சிலைகள் வைத்து வழிபடத் தடையில்லை. தெருக்கோயிலோ வேறு எவர் சிலையோ இல்லை.

அரிதாக, ஆளும் மன்னர் படம் உண்டு.

அரபியராய் அங்குள்ளார் தவிர எவர்க்கும், மனையுரிமையோ, இட உரிமையோ குடி உரிமையோ இல்லை.

பனிக்கால அகவை 60. அது முடிந்ததும் அவரவர் இடத்திற்குப் போய் விட வேண்டும். ஆதலால் ஆவணப்பதிவகம் இல்லை.

ஆடு, மாடு, கோழி, கழுதை, குதிரை, நாய் என எவையும் வளர்த்தல் இல்லை. தச்சு – கொல்லு – தட்டு எனத் தொழிற்சாலை இல்லை. நெசவகம் இல்லை. அரிசி, பருப்பு, கோதுமை முதலியவும் பிற பிற தேவைப் பொருள்களும், உடை முதலியவும் வெளியே இருந்து தான் வர வேண்டும்.

பழவகைகள் காய்கனி வகைகள் எல்லாமும் அப்படியே.

மகிழ்வுந்து கழிவு நீர், ஓரீர் இடங்களில் காண முடிந்தது. பல்லாயிரம் உந்துகள் இருந்தும் நூற்றுக் கணக்கில் சிவப்பு விளக்கில் நின்றும்

**ஓரிடத்தும் ஒலிப்பான் பயன்படுத்தவில்லை.**

சாலைகளில் இடப்பக்கம் போதல் நம் வழக்கம்.

அங்கு வலப்பக்கம் போதல் வழக்கம். பெரும்பாலும் ஆடவரும் மகளிரும் வண்டியோட்டும் பயிற்சி உடையவரே.

குழந்தையர் உடற்பயிற்சிக்கு மிதிவண்டி வீட்டுக்குள் விட உண்டு.சாலையில் மிதிவண்டியோ துள்ளுந்தோ செல்ல உரிமை இல்லை. ஆதலால் சாலையில் கண்டால் மகிழ்வுந்து, அரிதாகப் பேருந்து, பள்ளிக்கூட உந்து, சரக்குந்து உண்டு. **தொடர்வண்டி இல்லை.**

குறிஞ்சி இல்லை; முல்லை இல்லை; மருதம் இல்லை; நெய்தலும் இல்லை – சகாரா – கலகாரி இராசபுத்தானா போலும் பாலையும் இல்லை, ஊடு பசுஞ்சோலையும் இல்லை; தோப்பு தோட்டம் என வீட்டளவிலும் கூட இல்லை. கட்டடப் பரப்பு – சாலைப் பரப்பு – மற்றவை மணற்பரப்பு. ஊடே ஊடே எப்போதோ சூறைக்காற்றால் நொய் மணல் பறந்து பரவலுண்டு. உண்டிப் பொருள், பயன் பொருள் வெளியில் இருந்து தருவிப்பு என்றால் குடிநீர் – குளிநீர் முதலிய நீர் வேண்டுமே!

மணலைத் தோண்டின் நீர் உப்பு நீர் தானே!

கடல் நீரே குடி நீர் புட்டியில், பெருங்கலங்களில் !

குளிநீர் முதலியவற்றுக்கு எத்தட்டும் இல்லை. பயன்படுத்திய அளவுக்குத் தக **அளவிக்** காட்டும் தொகை உண்டு.

ஒரு மாவட்ட அளவு நாடு. ஒரு பெரிய நாட்டின் வளமெல்லாம் தன் கன்னெய் – கரி நெய் ஆயவற்றால் கொள்கின்றது.

உலக நாட்டு வள மெல்லாம் தன்னிடம் குவிய,

**நாடென்ப நாடா வளத்தன.**

என்னும் நாட்டின் இலக்கணத்திற்குச் சான்றாய் விளங்குகின்றது.

அன்று உலாச் சென்று மீளும் போது தமிழ்நாடன் எங்களைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். நண்பகல் உணவுக்காக!

சுவை நீர் பருகி எங்கள் கலந்துரையாடலாகியது!

தமிழ்நாடனே வினவினார் ; பதிவும் செய்தார் ; இளவழகரும் தமிழகரும் பங்கு பற்றினர். வேதியம் புகுதல் அருச்சனை நிகழல் இராசராசன் காலம் தொட்டுத் தான் என்று பலர் சொல்கின்றனர். உண்மை என்ன? என்றார்.

இராசராசன் காலம் பத்தாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியுமாம்.

ஆனால் தொல்காப்பியத்திலே வடசொல் வருமானால் அச் சொல்லை அப்படியே கொள்ளாமல் தமிழ் மரபு போற்றிக் கையாள வேண்டும் என்றும்,அதுவும் செய்யுட்கு இல்லை என்றும், மொழிபெயர்ப்பிலும் அந்நெறி போற்றப்பட்ட வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

"மரபு நிலை திரிதல் செய்யுட் கில்லை"

"மொழிபெயர்த் ததர்ப்பட யாத்தல்"

என்பவை அவர் நூற்பாக்கள்.அவர்காலம் இராசராசனுக்குக் குறைந்தது. 1700 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

சங்க கால வேந்தன் **முது குடுமிப் பெரு வழுதி;** அவன் பல்யாக சாலை முது குடுமிப் பெரு வழுதி எனப்பட்டான். அவன் செய்த வேள்விகள் (யாகங்கள்) பல என்பது பெயராலேயே விளக்கமாம். அவன் **பாண்டியன்.**

வேள்விக்குடி என ஊரே உண்டு. அது வேதியர்க்கு வழங்கப்பட்ட செப்பேடும் உடையது.

இராசசூய யாகம் வேட்ட **பெருநற் கிள்ளி** என்பான் **சோழன்.** கண்ணகிக்கு இமயக் கல்லெடுத்து கங்கையில் நீராட்டிக் கொண்டு வந்து கோட்டம் நிறுவிய **செங்குட்டுவன்** எத்தனை ஆற்றல் உடையவன். ஆயினும் மாடலன் காட்டிய வழியில் வேள்விச் சாலையுள் ஒடுங்கி விட்டான்! மாடலன் **தேவந்தி** என்னும் **வேதியப் பெண்ணைக் கண்ணகி கோயில்** வழிபாடு **செய்ய அமைத்துவிட்டான்.**

ஆக, மூவேந்தர் முடிகளையும் வேதியம் பற்றிக் கொண்டு நீர்வளமிக்க விளை நிலங்களையெல்லாம் **மங்கலம், திருமங்கலம், உத்தமதானபுரம், மகாதானபுரம்** எனக் கவர்ந்து விட்டது. சதுர்வேதிமங்கலம் திரிவேதிமங்கலம் எனவும் வளநிலம் வேதியம் கொண்டது.

**வில்லின் வெற்றியையும் வேலின் வெற்றியையும் தருப்பைப் புல் வெற்றிக் கொண்டு கோலோச்சியது!**

தனக்கு மாற்றாகக் கிளர்ந்த **பவுத்தம், சமணம்** ஆயவற்றை வேந்தர் துணைக் கொண்டு அழித்தது அல்லது பரவவிடாமல் நாடு கடத்தி, **பருமியம், சப்பானியம், சீனம், ஈழம்** எனப் போக விடுத்தது.

தேவார ஆசிரியர்களுக்கு முந்தியவர்கள் **காரைக் காலார், திருமூலர், மணிவாசகர்.** அவர் பாடல்கள் மெய்யியல் மேதக்கன: இறையோடு ஒன்றச் செய்வன. தேவாரமோ கோயில் இருக்கும் இடமெல்லாம் சென்று இசைத்துப்பாடி அடியார் கூட்டம் பெருக்கியவை.

தேவாரம் கறையானுக்கு முற்றிலும் ஆட்பட்டு ஒழிந்து போகாமல் **காத்தவன் இராசராசன்.** தேவாரம் விண்ணப்பிக்க 48 ஓதுவார்களை அமைத்தவன் அவன். கெட்டி மேளம் கொட்டவும் குடமுழா வாசிக்கவும் ஒவ்வொரு வரை அமைத்தவன். **ஒரோ ஒரு அருச்சகனை** அவன் அமைத்தான்! அந்த ஒருவன் முதலை வாயால் ஐம்பதின்மரையும் விழுங்கி எவரொருவரும் தேவாரம் ஓதாமலும் தேவாரமே கருவறைப் பக்கம் புகாமலும் செய்து விட்டான். அவன்மேல் பழி எதனால் எனின் ஒரோ ஓர் அருச்சகனை அமைத்ததே! அவனுக்குப் பின்னர் ஒவ்வொருவர் காலத்தும் பெருகி மராத்தியர், தெலுங்கர் காலங்களில் வடமொழிப் பள்ளிகளையும் அக்கிர காரங்களையும் பெருக்கிக் கொண்டு இன்றும் மீட்க முடியாக் கொடு நிலைக்கு ஆட்பட்டுத் தமிழினம் சீரழிகின்றது. "பிரித்தானியத்தை வென்றாலும் பிராமணியத்தை வென்றிலோம்!" என்றும்

மூவா யிரமாண்டு மோது வடமொழியால்
காவாம் தகைநின்ற தண்டமிழை – மேவாக்
குமரித் தனிநிலைக்குக் கொண்டு வந்த அப்பர்
அமரர் மறைமலை யார்.

என்றும் **மொழி ஞாயிறு பாவாணர்** பாடினார்.

கிறித்தவர்கள் அடிமைப்படுத்திய கொடுமை பெரிது.கிறித்துவம் பரப்ப வந்த அடியார்கள் சமயப் பரப்புதலோடு **மருத்துவ மனை, கல்விக் கூடம்** ஆக்கியும் செய்த **அறஞ்சார் தொண்டே** தமிழனுக்குக் கல்வி வாய்ப்பும் வேலை வாய்ப்பும், சாதிமை ஒழிப்பும் உண்டாக வழிகாட்டியது. நம்மொழி இன வேறுபாடு அறியவும், விழிப்புறவும் வகை செய்தது.

இவ்வாறு வேறு பல வினவுதல்களும் நிகழ்ந்தன. அவர்கள் ஆர்வத் தளிர்ப்பு வினவுதல் வகையால் புலப்பட்டது.

உணவுக்குப் பின்னர் விடுதிக்கு வந்தோம். ஓய்வு கொண்டோம். இரவு 8 மணி அளவில் தமிழ்நாடன் குடும்பத்தோடும் எய்தினார். திருக்குறள் பயிற்றும் ஆசிரியரும் உடனானார். இரண்டு வண்டிகளில் அடுத்தே இருந்த கடற்கரை வழியில் சென்று **சரவண பவன்** உணவகம் புகுந்தனர். நாங்கள் அனைவரும் ஒருங்கே அமர்ந்துண்ணத் தக்க அமைவை உடனே அமைத்தனர். அவரவர் வேண்டுவ உண்டு அறைக்கு வந்து மேலும் உரையாடி மகிழ்ந்தோம்.

காலை உணவும் நண்பகல் உணவும் தமிழ்நாடன் வீட்டுணவே. ஒவ்வொரு முறையும் தகவான உணவு வர அம்மையார் ஆர்வத்தளிப்பு செய்தது! நண்பகல் உணவுக்கு முன்னும் பின்னும் சிலர் குடும்பம் குடும்பமாக வந்து பார்த்தனர்; கலந்துரையாடினர். நண்பகல் உணவில் வந்த பலரும் உடனுண்டனர். மாலை 3 மணியளவில் புறப்பட்டு 6 மணிக்குப் புறப்படும் சென்னை வானூர்தியில் புறப்பட நிலையம் எய்தினோம்.ஆங்கும் சிலர் குடும்பத்தோடு எய்தினர். உடன் குளம்பி பருகினோம். வரவேற்பில் ஆண்கள் வழியனுப்பில் குடும்பங்கள்! **மூன்று நாள்கள் எனினும் 30 நாள்கள் இருந்த நிறைவில்** விடைபெற்று ஊர்தி நிலையத்துள் புகுந்தோம். புறப்பட்டதும் சரியான நேரம் ; சென்னை எய்தியதும் சரியான நேரம்.

**முந்துதலும் பிந்துதலும் :**

புறப்படும் போது முந்திய அளவில் சரக்குகள் எடை போடப்பட்டு உள்ளே தள்ளப்பட்டன. அதன் விளைவு என்ன? மேலே மேலே மற்றைப் பொருள்கள் குவிய நம் பொருள் பிந்துவதாயிற்று. வரும் போது இடையே போட நேர்ந்தது! அதுவும் ஒரு மணிப்பொழுது காத்திருப்புக்குப் பின்னேயே வந்தது. ஊர்திச் செலவு நேரம் போல் முன்னும் பின்னும் உள்ள காத்திருப்புப் பொழுது ஆகிவிடுகின்றது.

**குவைத்து :**

நிறைவாகக் குவைத்து பற்றிய என் கருத்து. அரபி மொழிப் பொருள் கேட்டும் பெயர்க் காரணம் அறிந்து கொள்ள முடியவில்லை.

தமிழ் உலக முதன் மொழி என்பது பல்ல பல அறிஞர்களால் மெய்ப்பிக்கப் பட்டுக் கொண்டு வருகின்றது. அம்மொழியியல்படி குறிக்கும் குறிப்பு இது ;

குவ் < குவி < குவியல்

குவ் < குவை < குவைத்து

கும் < கும்பல் < குமி < குமிப்பு

குப் < குப்பு < குப்பை < குவியல்



1330 குறள்களும்
திருவள்ளுவர் ஓவியத்தில்

வளங்கள் பலவும் ஒருங்கே குவிந்துள்ள இடம் குவைத்து என்பது தமிழ்வழி அறிவது.

**நாட்டைக் கண்ட பின் இதன் மெய்ப்பொருள் அதுவாகவே இருக்கும் என்னும் உறுதிப்பாடும் எனக்கு ஏற்பட்டது.**

**நாட்டு வளம் ஆங்கு வாழும் தமிழர் உளம்**

**இரண்டும் ஒருமைப்பட்ட**


**பொங்கு தமிழ் மன்றப் பொங்கல்** அழைப்பாம் என்னும் இவற்றுக்கு

மூலவராக இருந்தவர் தமிழ்மண் பதிப்பக நிறுவனர்


**திருத்தகு கோ. இளவழகரே** என்று நன்னெஞ்சுடன் பாராட்டி,

இச்சிறு சுவடி அமைகின்றது!


❖❖❖❖





குவைத்தில் தமிழ்நாடு பொறியாளர் குழுமம் நிகழ்த்திய நூல் அறிமுக விழா.



பொங்குதமிழ் மன்றத்தில் ஐயாவுக்கு நினைவு பரிசு அளித்தல்.



தங்கும் விடுதியில் மூவரும் கலந்துரையாடல்.



திரு. தமிழ்நாடன் இல்லத்தில்.



இரா. இளங்குமரனார், இளவழகனார், தமிழகன் ஆகியோருடன்
பொறியாளர். தமிழ்நாடன் தம் துணைவி, மகள்

Print @ The Printing House, Try-23. Ph : 2420121